உ

சிவமயம்.

# தி[illegible]சத் தெய்வமா[illegible]

12 AUG 1934

இது

இராதாபுரமென்று பெயர் வழங்கிவருகிற திருநர்சை

நகரவாசியாகிய

நெல்லையப்ப பிள்ளையவர்கள் குமாரர்

## நெ. ஆறுமுகம் பிள்ளையவர்கள்

இயற்றப்பெற்று

சிவநேசச் செல்வர்களாகிய

சில பெரியோர்களுடைய பொருளுதவியால்

மதுரை ஸ்ரீராம் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

[illegible]ரைட்] [விலை அணை 2.

**1934.**

6:2:417
N34
183788

உ

சிவமயம்.

# திருராசைத் தெய்வ மாலை.

இது

இராதாபுரமென்று பெயர் வழங்கிவருகிற திருராசை

நகரவாசியாகிய

நெல்லையப்ப பிள்ளையவர்கள் குமாரர்

## நெ. ஆறுமுகம் பிள்ளையவர்கள்

இயற்றப்பெற்று

சிவநேசச் செல்வர்களாகிய

சில பெரியோர்களுடைய பொருளுதவியால்

மதுரை ஸ்ரீராம் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

**1934.**

1879



# முகவுரை.

ஆவின் தீஞ்சுவைய முதுநிறைந்த அழகிய மடியென விளங்கும்
இமயப்ர்வதமுதல் அதின் தெக்கண பாகாந்தமாகிய கன்னிமாகுமரிவரை
குணகுட சமுத்திரங்களின் மத்தியப் பிரதேசங்களில் நிலைபெற்றிருக்கும்
புண்ணிய சிவக்ஷேத்திரங்கள் ஆயிரத்தெட்டில் இராதாபுரமென்று பெயர்
வழங்கிய இந்த இராசைமா நகரமுமொன்று. இவ்வரும் பெரும் பதியில் முன்
னொரு காலத்தில் கன்னி நாட்டை அரசாண்ட மன்னவராகிய வரகுண
பாண்டிய ராஜன் விஜயம்செய்து வேட்டம் புரிந்தபின் தன் நகரஞ்சென்று
சிவதரிசனம் செய்யக்கூடாமையால் அன்றிரவு அவ்விடத்திற்றானே தாம
தித்து அதுவே கவற்சியாகவிருந்த சமயத்தில் சிவதரிசனங் கிடைக்க
பெற்று அளவு கடந்த அன்பு மேலிட்டு ஆங்கோர் சிவாலயம் ஸ்தாபித்
ஸ்ரீ வரகுண பாண்டீஸ்வரர் நித்தியகல்யாணி யம்பாளென்னும் சிவலிங்
பெருமானையும் பார்வதி தேவியாரையும் பிரதிஷ்டை செய்து பூசித்து அ
தெய்வ பூஜைக்கின்றியமையாத தாவர சங்கமங்களையும் உரிமைப்படுத்தி
சென்றார். பின்னர் அவ்வாலயத்துக்கு அவசியமான இதர மண்டபங்களை
சில அரசர்களும் அன்பார்ந்த சில பெரியோர்களுஞ் செய்துமுடித்திருக்கின்
றனர். அன்றி ஆங்காங்கேயுள்ள சில புண்ணியவான்களால் சில கட்டளை
களும் மானிபங்களும் பாங்காக யேற்படுத்தப்பட்டுள. வருஷாந்திர விழாக்
களில் சித்திரைத்தேர் திருநாளும், ஐப்பசித் திருக்கல்யாணத் திருநாளும்,
மிகு கோலாகலமாய் நடைபெற்று வருகின்றன. சர்க்கார் படித்தரமும்
மிகவுந் தகுதியா யமைந்துள்ளது. திருக்கோவி லதிகாரிகளுடைய விசா
ரணைக்குட்பட்டிருக்கிற தாவரச் சொத்துக்களும் ஏராளமாயுள. திருக்கோவி
லில் சங்கநாத முதலிய சமஸ்த வாத்தியங்களும் தினுதினங் கோஷிக்
கின்றன.

இத்துணைப் பெருஞ் சிறப்புவாய்ந்து மகாமகிமை தங்கப்பெற்ற சிவன்
கோவில் ஒன்று கன்னிவிநாயகர் கோவிலுக்கும் அழகிய மணவாளப் பெரு
மாள் கோவிலுக்கும் ஆதாரமாய் இத்திருராசைநகரில் அமையப்பெற்று
ஆங்குவரும் பக்தஜனங்கள் கண்டு பேரானந்தங்கொண்டு பல தோத்திரம்
புகன்று நானுவிதமான தொண்டுசெய்யா நிற்ப. அருட்பிரகாசமாயிலங்குவது
நம்மனோர் பாக்கியவசமேயொழிய வேறின்று. மேலும் இராஜராஜச்சோள
னென்னும் பெயர்தாங்கிய மகாராஜன் இந்நகரில் முன்னொரு காலத்தில்.

ஆண்டாரென்றும் அது காரணத்தால் இந்நகருக்கு இராஜராஜ புரமென்றும் இராஜை நகரென்றும் பெயர் வழங்கிய பின்னர் இராதாபுரமென்றாயிற்றென்றும் அக்கோவிலில் வரையப்பட்ட சிலாலிகிதங்கள் மூலமாகத் தெரிகிறதாம். ஆகவே இராஜை நகரென்றும் இராதாபுரமென்றும் தற்காலம் வழங்கிவருகிற பெயர் மிகவும் அழகுவாய்ந்த பெயராய் இந்நகர்க்கு அமைந்திருக்கின்றது. அன்றியும் சூரன்குடியிலிருந்த புண்ணியதேவி பக்த சிரோன்மணியாகிய மஹான் வன்னியப் பெருமாள்க் கவிராஜரவர்கள் நமது அன்னையாராகிய ஸ்ரீநித்திய கலியாணியம்மாள்பேரில் பிள்ளைத்தமிழ் என்னும் ஓர் அரிய செந்தமிழ் மாலை இயற்றியிருக்கின்றனர். அம்மாலை தேவியாருடைய திவ்விய சந்நிதானத்தில் பல்லாண்டுகளுக்கு முன்னமே அரங்கேற்றப்பட்டுளது. அச்சுக்கு வாராதபோதிலும் அறிஞர்களாலும் கவிஞர்களாலும் போற்றப்பட்டு வருகிறது. அப்பிள்ளைத்தமிழ் நமது பாராயணத்துக்குரியது.

இது இவ்வாறாக லோகநாயகியாகவும் இராஜ ராஜேஸ்வரியாகவும் விளங்குகிற ஸ்ரீ நித்திய கலியாணியம்மாள்பேரில் யாதாம் ஒரு தோத்திரம் இயற்ற வேண்டுமென்ற விருப்பம் எனக்கு சுமார் இருபது வருஷ காலமாயிருந்து வந்தது. அதை நிறைவேற்றுந் ததி இப்போது தேவி கிருபையாற் கிடைக்கப்பெற்றமையாலும் கசடறக் கற்ற கல்வி திறமையுடையவனல்லேனாதலாலும் எனக்குத் தெரிந்த அளவிற் சில நாமாவளிகளும், கீர்த்தனைகளும், அகவல், விருத்தம், சந்தவிருத்தம், பஞ்சகம், சிந்து, நொண்டிச்சிந்து, நலுங்கு, ஊசல் முதலியவைகளும் அடங்கிய திருராசைத் தெய்வமாலை என்னும் பாடலை எனதார்வத்தால் இயற்றியிருக்கிறேன். அவற்றிலேதேனும் வழுக்களிருக்கக்கூடும். இருந்தாலும் அன்னபட்சியானது பாலை மட்டுங் கிரகித்துக் கொள்வதுபோல தேவியாருடைய மெய்ம்மை குன்றாத புகழை மட்டும் கிரகித்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

## அவையடக்கம்.

திருராசைத் தேவிக்குச் சீரலங்கல் செய்ய
வருமார்வத் தாலே வகுத்தேன்—பரவுமதில்
சொற்பொருட் குற்றங்கள் தோன்றிடினு மான்றோர்கள்
நற்றுதியாக் கொள்வர் நயந்து.

183788

சிவமயம்.

# சாற்றுக்கவிகள்.

இராதாபுரம் சப்ரிஜிஸ்தரார் சைவத் திருவாளர் ஆற்றார்

## A. R. விஸ்வநாத பிள்ளையவர்கள் B. A.,

இயற்றியவை.

இங்கிதமாய்த் தென்ற லினிதுவந்து லாவுகின்ற
பங்கமிலா ராசைப் பழம்பதியில்—மங்களமாய்
வீற்றிருக்குங் கல்யாணி விண்ணவர்பெம் மாட்டிமேல்
சாற்றியுளான் சங்கீதத் தார்.

எவனுமவ் வாக்கியோன் என்னிலோ விம்மைப்
பவநீக்கு மெங்கள் பதியோ—டுவந்துறையுங்
கல்யாணி யைப்பரவுங் கண்ணியமார் ஆறுமுக
நல்வாண னென்பேன் நயந்து.

இராதாபுரம் வக்கீல்

## பிரம்மஸ்ரீ முத்துவய்யரவர்கள்

இயற்றியவை.

பாரோர் துதிராசை பத்திபுரி ஆறுமுகம்
பேராருந் நெல்லையப்பன் பெற்றெடுத்த—சீர்தோன்றல்
செய்யுங் கவிகளையான் செவ்வேளின் நற்கருணை
பெய்யும் மழையதுவென் பேன்.

பாலதிலே நெய்யமைந்த பான்மையதாய் ஆறுமுகம்
சீலமிகு செந்தமிழிற் செப்பினான்—கோலமயில்
வாகனற்குந் தாய்க்கும் வரகுணராந் தந்தையர்க்கும்
பாகமுடன் பத்திதரும் பா.

# பாயிரம்.

சீராரும் வீதித் தெனிராசைப் பார்வதிமேல்
ஏராரும் மாலை இயற்றுதற்கு—நேர்மையுள
சொற்பொருளை நல்கத் தொழுதேன் கணபதியாம்
நற்சோம சுந்தரன்றாள் நன்கு.

பிறைசூடுந் தெய்வ மிராசை வரகுணற் பேணுதேவி
இறைவியோர் பார்வதி நித்ய கலியாணி யேர்மலர்த்தாள்
முறையாய் வழுத்தவே யன்பினாற் றாசன் மொழிதமிழிற்
குறையே திருந்தாலும் நன்மையா யம்பிகை கொள்ளுவளே.

துரைமகட்கும் மான்மகட்குஞ் சொற்காந்த னென்னும்
சரவணத்தோன் நற்றாள் சரண்.

செல்வனார் மீனாட்சி சுந்தரர் சீர்வேலர்
சொல்நந்தி நற்றாள் துணை.

வெண்டா மரைச்செல்வி மெல்லடிக ளேதுணையாம்
தண்டமிழால் மாலைசெயத் தான்.

ஞானசம் பந்தரொடு நாற்குரவர் நாயனார்
மாணடிகள் போற்றிவாழ் வாம்.

உமையொருபா காதீன வொண்குரு பாதம்
தனைப்போற்ற நன்மை தரும்.

உ

சிவமயம்.

# திருநாசைத் தெய்வ மாலை.

## நாமாவளிகள்.

இராகம்—காப்பி தாளம்—ஆதி.

பல்லவி.

கஜமுக கணபதி நமோ நமோ
கண்ணுதல் பாலா நமோ நமோ

அநுபல்லவி.

அயன்முத லாகிய அண்ட ரொடுநரர்க்
கருள்சோம சுந்தர நாமங்கொள்

———

ஆனைமுகன் ஷண்முகவன்-ஐமுகன்
கலியாணி நமோ நமோ

———

பல்லவி.

நடராஜா நடராஜா நிர்த்தனசுந்தர நடராஜா

அநுபல்லவி.

சிவராஜா சிவராஜா-சிவ
காமிப்பிரிய நடராஜா

———

பல்லவி.

முருகையா முருகையா-ஆறுமுகம் பன்னிருகையா

அநுபல்லவி.

முருகையா முருகையா-மூவிரு
படைவீட்டரசையா

———

கல்யாண சுந்தரி கடம்பவன சுந்தரி கனகசபை சுந்தரி
காமாட்சி சுந்தரி விசாலாட்சி சுந்தரி.

———

## கீர்த்தனங்கள்.

இராகம்-கேதாரகௌளம் தாளம்-ஆதி.

பல்லவி.

சோமசுந்தர கணபதி துணைமலரடிபணி
பவர்க்கருள் அனைகலியாணி தனது கோவில் (சோ)

அநுபல்லவி.

க்ஷேமமாகத் தெரிசிப்பவர்க்கு நிறைதனமும்
சுகமனமும் மிகுகன பரகதியுந்தரு (சோ)

சரணம்.

புரத்தை மேருகிரி மீதுவரை பவர்கயிலை
பதவியெண்ணும் பிராட்டியாரை
ஆரூரர் சேரமான் செலுமுன் அங்கையாலே
தூக்கிவைத்த தும்பிமுக நாதராகும் (சோ)

(2)

வன்னிதூர்வை யன்பாற்சூட்டி மாபூசனை யாற்றுவோர்க்கு
வரங்கள்தரும் தெய்வதமே
நன்மைவேண்டி யாறுமுகம் நவிலும்பாட லநுமதித்து
நாளும்பாது காத்தருளும் (சோ)

---

இராகம்-ஆனந்தபைரவி தாளம்-ஆதி.

பல்லவி.

எப்போ கிடைக்குமோ கிருபை (எப்)

அநுபல்லவி

அப்புட னிளமதி யணிசடைக் கடவுளே
முப்போது மும்மதடி முறையுடன் சிந்திக்க (எப்)

சரணம்.

ஆரணம் நாலுக்கு மரிபிரமற்கு மெட்டாப்
பூரணனே மெய்ஞ்ஞான மூர்த்தியே மூல
காரணனே கலியாணிதன் நேசனே
கஜமுகனொடு செந்திற் கந்தனைத் தந்தோனே

கருணையே திருமேனியா யுடையவனே
கள்ளமனதின்றி யுள்ளத்திலே இருக்கும்
தெருளுடை யார்க்குரிய பொருளதா யிருந்து
திருராசை நகர்வாழும் வரகுண பாண்டீசா (எப்)

(2)

சந்திர ஜடாதரா சங்கரா கங்காதரா
இந்தனஞ் சுமந்தேம நாதனை யோட்டிவித்து
அன்பரைக் காத்தவா ஆனந்தத் தாண்டவா
இம்பரு மும்பரும் ஏத்தும் பரமசிவா
இறைவனே யுமதிருபதமலர் வணங்குவோர்
எளியரைக் காத்தருள் செய்வதே தொழிலாகி
நிறைபவனே சருவேச கைலாசா
நிதம்பணி யாறுமுக தாசற் கருளுமீசா (எப்)

---

கதனுகுது என்ற மெட்டு.

பல்லவி.

நித்யகலியாணித் தாயே காப்பாயே
நிமலர்க்கான துணையே நேமியோன் சோதரியே (நித்)

அநுபல்லவி.

எத்திசையும் போற்று மிறைவி சாம்பவி
ஈசன் வரகுணர்க் கிடதுபாகம் வாழும் (நித்)

சரணம்.

கஞ்சமலர்டி தஞ்ச மென்று சொல்லி
மிஞ்சுபத்தி யாலே கெஞ்சு மன்பர்தமை
அஞ்சலென் றருளி யாதரிக்குந் தேவி
அகிலமெல்லாம் பேணி அறமெண்ணான்கு புரியும்
அனவரதமுமார் திருமஞ்சட்காப்பின்
அற்புதங்காட்டியே யாள்மகமாயி
வனப்புளகணபதி முருகனுர்தாயி
வரங்களாறுமுக னுக்கருளாயி (நித்)

---

## தினமணி என்ற மெட்டு.

### பல்லவி.

சீரார் தெனிராசைச் செல்விநித்ய கல்யாணி (சீ)

### அநுபல்லவி.

பாரோர்புகழ் பார்வதி பதிவர குணர்தேவி
பத்தர்தமைக் காத்தருளும் பரம தயாநிதி (சீ)

### சரணம்.

தலைநகரா மதுரைத் தலத்தில்வாழ் பெருமானும்
மலையத்துவசருக்கு மகளாய்க் கிரீடந்தாங்கி
மாகயிலை சுந்தரரை மணந்தர சாட்சி நல்கும் (சீ)

(2)

இமயத்துவச வேந்தற் கெழிற்குமரியாய் வந்து
நிமலரை மணந்தருள் நேமியோன் சோதரியே
நிதம்பணி யாறுமுகன் விளம்பு மாலைசூடும் (சீ)

---

இராகம்-சண்முகப்பிரியை தாளம்-ஆதி.

### பல்லவி.

சீரலை வாயுறையுங் கந்தன்வள்ளி தெய்வயானைத்
தேவிமாரின் லோலன் சீலன் (சீ)

### அநுபல்லவி.

காரிறங்கித் தங்கும் கடிமலர்ச் சோலையும்
ககனந்தடவுங் கோபுரமுங்கண்டு மயிலாடும் (சீ)

### சரணம்.

பகரும்பன் னாட்டவரும் அன்புடன் வந்து
பாங்காய்க் காவடி பூசித்துச் செந்திலென்னும்
நகரத்தை யாடல்பாடல் நாதத்துடனே சுற்றி
நற்றினமதிலே செலுத்தி நன்மை யடையும் (சீ)

(2)

யாவரானுலும் அன்பர்களுக்கிகபரசித்தி
யளித்திடும் ஈசகுமாரன்
தாவு மயில்வேலன் சரவணத் தொருவன்
தங்குமிராசை யாறுமுகம் போற்றிசெயும் (சீ)

---

ஸாதரமுக குகா என்ற மெட்டு.

இராகம்-தோடி. தாளம்-ஆதி.

பல்லவி.

சாமி வள்ளிநாதா திருராசை மேவும் (சா)

அநுபல்லவி.

பூமாதேவி நாதன் மருகா முருகா
புண்ணியச் சிவனூர்தந்த கண்ணியமான கந்த (சா)

சரணம்.

ஏரார் மயிலூர்ந்து சூராதிபரைப்
போராற்றி வென்ற சண்முகநாதா
சீரார் வேலவா தேவரட்சகா
செப்புதமிழ் ஆறுமுகம் எப்போதும்போற்றிசெயும்(சா)

---

சுஜன ஜீவனு என்ற மெட்டு.

பல்லவி.

வள்ளி நாயகா ஈசா புள்ளிமயிலேறும் புண்ணியா (வ)

அநுபல்லவி.

ஒள்ளிய வயிற்கையா உற்றவர்க்கருள் மெய்யா
நள்ளிருள் நம்பி புதல்வியை விரும்பிக் கொள்வினை புரிந்தவா ()

சரணம்.

தேவர்தமைக் காப்பதற்காச் சூரபதுமனைச்
சிங்கமுகன் தாருகனை வெற்றி கொண்டவா
நாவலரும் பாவலரும் காவலருங் கைகூப்பித்தொழும்
நம்பனே யுன்பாத பங்கயச்சேவை யிங்கெனக்குத்துணையே ()

(2)

திருமயிலைச் சிவநேசர் செல்விபூம் பாவையென்பை
உருவாக்கி வுயிர்தந்த உயர்ஞான சம்பந்தராய்
வருமுருகா மால்மருகா வண்டமிழ்க் கும்பசர்கீரற் கருள்செய்
வள்ளலே பாடல்சொல் லாறுமுகம் வம்சரட்சகனே (வ)

---

சரஸஸமதன என்ற மெட்டு.

பல்லவி.

தாமச மேனையா தமியற் கருள்செய்ய (தா)

அநுபல்லவி.

மாமயூர மேறும் மன்னவா செந்தூரா
நேமியோன் றன்மருகா நெட்டிலை வேல்முருகா (தா)

சரணம்.

நின்னடியார் தொண்டும் பாதபூசை கொண்டும்
தன்ம மார்க்கத்தென்றுந் தாசன் வாழநோக்கி
அன்னை கலியாணி தன்னை யுற்றவேணி
மன்னர்க் கபிமானி வரங்கள் தரவாநீ (தா)

(2)

தேவர் தமக்காக சூரர்களை வென்ற
காவலனே யுந்தன் கஞ்ச மலர்த்தாள்போற்
றுவலாறுமுக தாசன் பாடுந் தமிழ்
மேவி யருள்செய்யும் மீனும்பிகை பாலா (தா)

---

சங்கல்பமே என்ற மெட்டு.

பல்லவி.

கந்தப்பனே காத்தருள் செய்வாய்
கனக மயிலேறும் கர்த்தனே சுத்தனே (கந்)

அநுபல்லவி

சங்கரசாமி தருபாலா சரவணேற்
பவனும் சற்குருவே (கந்)

சரணம்.

பத்த ருள்ளத்திலும் படைவீடு தனிலும்
மெத்த விருந்தருள் மேன்மைக் கடவுளே
எத்திசை யும்போற் றெந்தை செந்திவேலா
சத்தி கலியாணித் தாய்தரு சீலா (கந்)

(2)

வீரவாகு தேவைத் தூதுகொண்ட நாதா
விண்ணவ ரைக்குடி யேற்றுவித்த நீதா
பாரும் விண்ணும்புகழ் பழனி யாண்டவனே
பகராறு முகதாசற் கருள்வோனே (கந்)

---

இராகம்-கரகரப்பிரியை. தாளம்-ரூபகம்.

பல்லவி.

மலரடி சேவைசெய் மனமே—நங்கைமார்
வள்ளி தெய்வயானை பாகன் புள்ளிமயி லேறும் வாகன் (ம)

அநுபல்லவி.

தலமெல்லாங் காத்தருளும் நிலவிய புகழ்கந்த சாமி (ம)

சரணம்.

சூராதி சூரர்தம்மை வேருடன் களைந்துமே தேவர்
தொன்மையான பதவிகளை நன்மையுடன் தந்தகந்தன் (ம)

(2)

வேற்படை தாங்கு மண்ணல் வேண்டிய வரந்தரும் வள்ளல்
காக்குமா லோன்றன் மருகன் கலியாணி யன்னை சுதன் (ம)

---

இராகம்-கானடா. தாளம்-ஆதி.

பல்லவி.

தேவ சேனாபதியே சண்முகத்தொரு (தே)

சரணம்.

மேவலர் தமைவென்று தேவரை வாழ்வித்த
சேவலங் கொடிபடைத்த சண்முகத்தொரு (தே)

(2)

வள்ளிநாதா பச்சைப் புள்ளிமயின் மீதேறும்
ஒள்ளிய வேற்படையாய் சண்முகத்தொரு (தே)

(3)

பத்தரை யாதரிக்கும் நித்தனருள் பாலா
கர்த்தனே காத்தருள்வாய் சண்முகத்தொரு (தே)

---

நோட்டு மெட்டு. ஆதி தாளம்.

கண்ணிகள்.

கந்தப்பெருமான் செந்திமா நகரில்
வந்தருள் செயுந் தந்தையராம்
கரமது கூப்பியே பதமலர் தொழுவோரைக்
காத்தருள் செயுஞ் சிந்தையராம் (கந்)

(2)

சூராதி சூரன் சூரபதுமன்
சிங்க முகனுடன் தாருகனை
நேராக வென்ற வேலாயுதவள்ளி
நேசராம் விசு வாசராம் (கந்)

(3)

செந்தமிழ் நூலை கும்பசருக்குத்
தெரித்தருள் செயுந் தேசிகராம்
தேவரை விண்குடி யேற்றியருளிய
சீலராம் சிவ பாலராம் (கந்)

(4)

படைவீ டாறு முடையவராம்
பத்தரை யாண்டருள் புரிபவராம்
பாரிலும் விண்ணிலும் யாவரும்போற்றச்
சீருடன் சிறப்புத் தருபவராம் (கந்)

(5)

மங்கையர்க் கரசியா ரன்பினுக்காக
மங்கல நாண்காத்த மறையவராம்
வருதொழும் பர்க்கும் பயிலாறு முகற்கும்
வராராசை யிருந்தருள் செய்பவராம் (கங்)

---

சீதாபதே என்ற மெட்டு.

பல்லவி.

நந்திகேசா நம்பர் கோவில்வாசா
நங்குரு மரபின் முன்குரு வென்றிடும் (நங்)

அநுபல்லவி.

அந்திப்பிறை அண்ணல் பாதம்பணி
அண்டர் முடிவேத்ர தண்டத்தாலே தாக்கும் (நங்)

சரணம்.

மூலஸ்தான நந்தி வாசல் கொடிபீடம்
மணிநந்தி யென்னும் பஞ்ச நந்தியாகி
சீலமுள்ள தேவா யாலமுண்ட கண்டர்
திருக்கயிலை காக்குஞ் சீரூர்தி யாகும் (நங்)

(2)

பொருள்வேண்டி யேனும் ஞானம் வேண்டியேனும்
புத்ர யிச்சையாலும் பற்பல துன்பத்தாலும்
பரவு மன்பருக்கு வரங்கள் தரும்தாதா
பயிலாறு முகதாசன் பணி பாதா (நங்)

---

நந்தனர் மற்றதெல்லாம் பொறுப்பேன் என்ற மெட்டு.

பல்லவி.

ஞான சம்பந்த குருநாதா-எந்
நாளும் அடியார்க் கருள்தாதா (ஞா)

அநுபல்லவி.

வானும்புகழுந் திருவளநகர் தனில் மேவும்
ஆனசிவபாத விருதைய ரருந்தவமே (ஞா)

(2)

கவுணியர் குலதீபா கருணைவளர் சொரூபா
சவுனகா தியர்தொழுஞ் சைவஸ்தாபன தேவா (ஞா)

(3)

பரசமயங்கள் பாரப் பாரி லவதரித்து
வரமரு ளுமைதிரு வள்ளப்பா லதையுண்ட (ஞா)

---

பல்லவி.

ஸ்ரீவெங்க டேசனே க்ஷீராப்தி வாசனே
சீதேவி நாதனே காப்பாய் அநுதினம் (ஸ்ரீ)

அநுபல்லவி.

உரிவெண்ணை யுண்டவா உலகைக்காக் கின்றவா
உற்றவரைப் பற்றுகின்ற குற்றங்களைப் போக்கியருள் (ஸ்ரீ)

சரணம்.

ஆலிலைமேற் பள்ளி கொண்டவா ஆண்டவா
அழகா னந்த முகுந்தா வைகுந்தா
நீலமேக சாமள வர்ணனே கோபாலனே
நித்தமுங் கருடவாக னத்திலே பவனிவரும் (ஸ்ரீ)

(2)

இராஜை நகர்க்குடபாற் கோவில்கொண் டருள்திரு
நாதனே கமலக் கண்ணனே முகுந்தனே
தேசுமிகு ஸ்ரீராமன் திருவவ தாரஞ்செய்
தெய்வதமே யழகிய மணவாளப் பெருமாளே (ஸ்ரீ)

183788

## திருராசைச் சிந்து.

ஆதி தாளம்.

திருராசை நகர்வாழும் செல்விநித்ய கல்யாணித்
தேவிதந் திருப்பாகர்—வரகுணேசர்
திவ்ய சரிதம்பாட—அந்தச்
சிவபெருமானவர் உதவிய கணபதி
தமதிரு பதமலர் மகிழ்வுட னேத்தியே
சிந்தனை செய்திடுவாம்.

(2)

கன்னிநா டென்று சொல்லும் பொன்னகர்க் கொப்பான
மன்னிய பாண்டிநாட்டை—அரசாண்டுவந்த
மதிவழிப் பாண்டியராஜன்—அரசர்
கருதும் வேட்டைக் கொருநாள் சிற்சில
படைபண் டாரத் துடனே யெழுந்து
கனராசை தனிற்புகுந்தார்.

(3)

புகுந்து விசையஞ்செய்து வேட்டையாடிய ராஜன்
புண்ணிய சிவபூசை—தினம்
புரிந்தொழுகும் மன்னவ ராகையாலே—மிகப்
பொங்கிய பத்திமை தங்கியே பரார்த்த
லிங்க ஸ்தாபனம் அங்கே செய்து
புகழுடைந் திருந்தனரே.

(4)

அவ்வண்ணம் பிரதிட்டை யாற்றிய காலமுதல்
ஆண்டவர் வரகுணேசர்—திருநித்ய கல்யாணி
அன்னையுடன் விளங்கி—மிகு
அற்புதக் கோவில் உற்றருள் செய்து
பற்றிய தொண்டரை நித்தலுங் காத்தே
அன்புட னண்டருள்வார்.

(5)

மாவுங்கமுகுந் தென்னை மருத நிலப்பயிரும்
மற்றுள பலவளமும்—திருநாள் வளமும்
மன்னிய ராசைத்தெய்வம்—திரு
மஞ்சட் குங்கும வற்புதங் காட்டித்
தஞ்சமென் ஹேர்க்கருள் நித்ய கல்யாணி
வரகுண பாண்டீசரே.

---

## இராசைச் சிந்து.

ஆதி தாளம்.

கலியாணி யம்பிகை பாதமும்—நமது
கர்த்தர் வரகுணர்தம் பாதமும்—மிகக்
கருதிநாளும் உறுதியாகச்
சுருதிகூறும் வழியில்நின்று
காலச்சேபஞ் செய்துவருவமேல்—நிறை
கனமுந் தனமுங் குணமும் பெருகுமே.

(2)

இராசையென்னும் தெய்வப் பதியிலே—உள்ள
நல்வளத்தைக் கொஞ்சஞ் செப்புவேன்—மிக்க
நயந்தருந் தெங்கின் குலைகள்முற்றி
வயற்புறத் திருக்கும் வாழை
நன்கனியின் மேல்விழுந்துமே—யெங்கும்
நாறுந்தேன் வடிந்து பெருகுமே.

(3)

நெற்பயிர்கள் கன்னல் போலவே—யெங்கும்
நெருங்கியோங்கி வளர்ந்து செழிப்பதால்—அங்கே
நித்த னடியார்கள் பத்திமையோடு
உத்தம தர்மங்கள் மெத்தவே செய்து
நிறைந்த செல்வ மாயிருக்குமே—யெங்குஞ்
சிறந்தகீதம் மனசை யுருக்குமே.

(4)

மாடமாளிகை யுப்பரிக்கையும்—அந்த
மறுகிலெங்கும் மேடை வீடுகளும்—உயர்
மன்னவரோடு பின்னரும் பார்த்து
எந்நகரீதென நன்னயங் கூறும்
மதிப்புடைய தாயிருக்குமே—சத்திரசாலை
மாறிமாறி யாட்கள் தங்குமே.

(5)

குடதிசைமால் கன்னிகணேசர் கோவில்—வடகுணபால்
கொன்றைசூடும் பெருமானார் கோவில்—இடபக்
கொடியினழகும் கெடியினழகும்
தெருவினழகும் தருவினழகும்
குவலயத்தோர் புகழத் தக்கதே—இதுவர
குணர்கல்யாணி யன்னை கிருபையே.

---

## திருராசை நொண்டிச்சிந்து.

அன்பர்களே யொருசெய்தி—கேளுங்கள்
அருமைத் திருராசைப் பெருமைதனை
உரிமை யுடன்சொல்வேன்—பக்கத்து
ஊர்க்கெலா மிதுதலை நகரமாகும்
சீருள்ள பழம்பதியாம்—ஆங்கே
தெற்குமேற்குத் தரதிசை யீசானத்தில்
தக்கசில கோவிலுண்டு—சற்றுமையம்
தாய்நித்ய கலியாணி யாலயத்தின்
தூயசிறப் போவதிகம்—கீழவாசல்
துலங்குந் துவசத்தம்ப மதினழகும்
இலங்கு விமானத்தழகும்—குணபால்
ஏற்றமதில் தெப்பக்குளந் தேரழகும்
சாற்றுநாலு வீதியழகும்—யெங்குஞ்
சாரும்பல மாளிகையும் உப்பரிக்கையும்

யாருங்கண் டிறும்பூதுகொள்வர்—அன்றி
எக்காரியத்திற்குந் தக்க கச்சேரிகளும்
சர்க்காராட்சி சத்திரங்களும்—ஆங்குள்ள
தடந்தனில் நீராடும் மாதர்மங்கலச்
சடங்குசெய் யாரவாரமும்—பல்லியமும்
தலமதைச் சுற்றியுள்ள குளப்புறவும்
நலமுடன் பொருந்தியதாற்—கன்னி
நாட்டுப்பாகம் தெக்கணத்தில் ராசைநகரும்
சேட்டமுள்ள தலமாகுமே.

---

## நித்திய கலியாணி யம்பாள் பஞ்சகம்.

சீரோங்கு வீதித் திருராசை யம்பதியில்
பார்போற்றக் கோவில் பணித்தருளிக்—கீர்த்திமிகும்
நித்யகலி யாணியருள் நேருவோர் தந்திமுகக்
கத்தனைமுன் போற்றல் கடன்.

(2)

திருக்கோவி லுட்சென்று தேவாதி தேவன்
வரகுணபாண் டீச்சுரனை வந்தித்—தாகரவென்
றன்னைகலி யாணிதா ளன்புடனே சேவிப்போர்க்
கின்னலொரு நாளுமிலை யிங்கு.

(3)

சேவிப்போ ரின்புறுவர் தேவிகலி யாணிதாள்
பாவிப்போர் பேறு பதினாறும்—மேவிப்பின்
கூற்றை யுதைத்தருளுங் கோமா னுலகுசேர்ந்
தேற்ற மடைவா ரிருந்து.

(4)

திருமஞ்சட் காப்பாலே நோய்நீங்குஞ் செல்வி
திருநீற்றால் மெய்ஞ்ஞானஞ் சேரும்—திருராசைத்
தேவிகலி யாணிப்பேர் செப்புவோர்க் கில்லையே
மேவலர்க ளெண்ணும் வினை.

(5)

சுந்தரியைப் பார்வதியை சூர்தடிந்த வேலவனைத்
தந்தகலி யாணியாந் தாயவளை—வந்தித்துச்
சுக்கிர வாரமதிற் றாயபூ சைபுரிவோர்
தக்ககதி பெற்றுய்வர் தாம்.

---

## நித்திய கலியாணி யம்பாள் அகவல்.

உலக மேத்தும் மதுரா புரியாம்
தலமோர் தென்பாற் சதமோ டிருபது
மயிலாந் தூரம் மன்னு மிராசை
வயின்சார் செல்வி வரகுணர் தேவி
நித்திய கலியா ணித்திரு நாமம்
எத்திசை யோரும் போற்றி வாழ
சேமக் கோவில் மேவி யிருந்து
நேமத் திருநாள் நிலையா யருளி
பழநகர் தன்னை வளம்பெறச் செய்து
முழவுட னேபல் லியங்க ளார்ப்ப
ஆறு காலப் பூசனை யமைத்து
வேறு முறைகள் விரிவாய் வகுத்து
பத்தி புரியும் பான்மை யவர்க்கும்
நித்தல் கோவில் சேவிப் போர்க்கும்
தருமஞ் செய்யுந் தக்கோர் தமக்கும்
இருமைப் பயனு மேற்ப நல்கி
மஞ்சட் காப்பின் மகிமை காட்டி
அஞ்ச லெனவே யனுக்கிர கித்துத்
தாங்கு மரசி சருவேச் சுவரி
பூந்தா மரைத்தாள் போற்றி போற்றி.

---

## நித்திய கலியாணி யம்பாள் விருத்தம்.

புவனிதனி லாயிரத் தெட்டென்னு மாலயம்
புராரியின் தலங்க ளாகும்
புகலுமவை தம்முளே மகிமையுள ராசையருள்
புரியும்பர மேச்சு வரியே
சிவனாரின் றேவியே சீதரன் றங்கையே
சிவசுப்ர மணியர் தாயே
செகமெலா மைந்தொழில் நடத்துமோர் செல்வியே
சிவசத்தி பஞ்சாட் சரியே
தவம்புரி யோகியர் பத்திசெய் தொண்டர்வட
தமிழ்வேதம் புகலு மாந்தர்
தவறுமல் ஆலயந் தொழுவோர்க ளனைவர்க்கும்
தண்ணருள் வழங்குந் தகவே
அவமின்றி நாலுறுதிப் பொருள்நல்கி யினியேனும்
அடிமைதனை யாண்ட ருளுவாய்
அன்னையே வரகுணர் தன்னையே மேவியருள்
அனவரத கலியாணித் தாயே.

---

## நித்திய கலியாணி யம்பாள் சந்தவிருத்தம்.

வளர்மதி தனைபணி சடைமுடி நாயகன்
மகிழ்தரும் வாழ்க்கைக் கொருதுணை யானவள்
மலையத் துவசருக்கும் இமயத் துவசருக்கும்
மகளென வந்துமே கதியருள் செய்தவள்
களிர்மிகு கற்பகச் சோலையி லங்குபொன்
னகர்க்கிறை நாண்முகன் கமலக் கண்ணன்
நானு விததேவர் யாவருங் கயிலை
நாதன் சரணம டைந்தோ லமிட
உளமதிற் கொள்பர னருளாலே யவுணரை
யொழித்துவிண் ணோரைக் காக்கும் பரிவாலே
உதித்தசண் முகநாதன் திருக்கைவே லாகவரும்
உமையவள் பார்வதி மகேஸ்வரி
தளமிகு பதுமா சனத்திசர் வேஸ்வரி
தாசரைக் காத்தருள் பரமேஸ்வரி
தலைமைசொல் ராசை வரகுணர் தேவி
தற்பரை கலியாணி யம்பிகையே.

---

## நித்திய கலியாணி யம்பாள் நலுங்கு.

இராகம்-சங்கராபரணம். தாளம்-ஆதி.

திருராசை நகர்வாழுஞ் செல்விநித்ய கலியாணி தன்மேல்
உரிமையுடன் நலுங்குரைக்க ஒருகைமுகன் தாள்துணையே

(2)

தரணியெல்லாந்தழைக்கும்வண்ணம் தாய்நித்யகலியாணியுடன்
பரம்பரனும் வரகுணேசர் பண்புடனே நலுங்கிட்டார்

---

இராகம்-எதுகுலகாம்போதி. தாளம்-ஆதி.

பல்லவி.

தாயே நலுங்கிடவா—அந்தத்
தர்மசொரூபமான நிர்மலமூர்த்தியுடன் (தா)

அநுபல்லவி.

மாய வாழ்க்கையிற் சிக்கி மண்ணுலகும் விண்ணுலகும்
மயங்கி நெறிகள் தப்பி வாடிடாமல்
மற்றவர்க் கில்லறதர்ம வழிகாட்டி யருள்மலே
மன்னர் தென்னர் புதல்வியாய் வந்தருளுங் கலியாணி (தா)

(2)

பத்தர்களுக் கருள்செய்யும் பார்வதி யேவுனது
பான்மையா றறிய வல்லார் பகவதியே
சித்தர்களும் ரிஷிகளும் தேவர்களும் யாவர்களும்
தெரிசிக்க வந்திருக்கும் நவரத்னப் பந்தரிலே (தா)

---

இராகம்-ஆனந்தபைரவி. தாளம்-ஆதி.

பல்லவி.

வாரும் வரகுணரே—நலுங்கிடவே (வா)

அநுபல்லவி.

வாரும் வரகுணரே வந்துகலி யாணியுடன்
யாரும் மனங்களிக்கச் சீரார் மணப்பந்தரில் (வா)

சரணம்.

கின்னரர் விஞ்சையரொடு கருட காந்தருவர்
கிம்புருட ரொடுசித்தி வித்தியா ஆதரர்
பன்முனிப்புங் கவர்தெய்வ கணங்கள் பதினெண்மர்
பல்லோரும்நல் லோரும்வந்து வீற்றிருக்குஞ் சபைதனில்(வா)

(2)

நீலமேக சாமள மாலெனுங் கடவுளுடன்
நித்தனரு ளாற்படைக்கும் பிரமதே வனும்வந்தார்
காலதாம சமின்றியே கோலமால் விடையிலேறும்
கர்த்தனே யுனைச்சேவித்துக் கதிபெற மணப்பந்தர் (வா)

---

இராகம்-மோகனம். தாளம்-ஆதி.

பல்லவி.

தேங்கா யுருட்டினர் வரகுண பாண்டீசர்—திருக்கையால் (தே)

அநுபல்லவி.

நீங்காத நேயமுடன் தீங்கான தில்லாமல்
யாங்குள்ள மனுக்களும் ஆங்காங்கே வாழும்படி
பாங்காக வேயருளித் தாங்குங் கருணையதை
யீங்கே காட்டுவார்போலச் சாம்பவி கல்யாணியுடன் (தே)

---

இராகம்-கமாஸ். தாளம்-சாப்பு.

பல்லவி.

மாலை மாற்றி யருளினர்—வரகுணேசர் (மா)

அநுபல்லவி.

மாலெனுங் கடவுட்கு மகிமைச்சோ தரியாகும்
வரத நித்யகலி யாணி யம்பாளுடன் (மா)

(2)

பல்லவி.

பன்னீர் சந்தனந் தெளித்தாள்-பார்வதிதேவி (பன்)

அநுபல்லவி.

அன்னவா கனமேறும் அண்ணலும் விண்டுவும்
அடிமுடி தேடிக்காணாச் சிவபரஞ் சுடர்மீது (பன்)

---

## நித்திய கலியாணி யம்பாள் ஊசல்.

நற்பவளப் பத்திகளாற் கால்க ணாட்டி
நலமான மரகதத்தால் விட்டம் போட்டு
ஒப்பிலா முத்தினங்கள் வடங்க ளாக
உரிமையுள மாணிக்கப் பலகை சேர்த்து
தப்பிலாத் தரணியுளோர் வானுள் ளோர்கள்
சௌமியமா யில்வாழ்க்கை வாழ வேண்டி
அற்புதனும் ராசைநகர் வரகு ணேசர்
அன்னைகலி யாணியுட னாடீ ரூசல்.

(2)

அரிபிரம ரிந்திரர்கள் சேவை செய்ய
அவர்தேவி மார்கூடி வடந்தொட் டாட்ட
பரிவுடனே சப்தரிஷி வேத மார்ப்ப
பல்லாண்டு பத்தர்குழாங் கூறி நிற்ப
உரிமையுட னரம்பையர்கள் பாடி யாட
உலகத்தா ரின்புற்று வாழ வேண்டி
திருராசை நகர்வாழும் வரகு ணேசர்
செல்விகலி யாணியுட னாடீ ரூசல்.

---

பல்லவி.

மங்களம் மங்களம்—நித்யஜெய
மங்களம் மங்களம் (மங்)

அநுபல்லவி.

சங்கரன் பார்வதி விக்ன ராஜற்கு மங்களம்
சாமி நாதன் நாச்சி மாருக்கு மங்களம்
துங்க நந்தி குருசைவ நால்வர்க்கு மங்களம்
தூயபூ மாதுநா மாதுக்கு மங்களம் (மங்)

திருராசைத் தெய்வ மாலை
முற்றிற்று.

---

எமது ஸ்ரீ சுந்தரத்தோழனார் திருவடி வாழ்க.

ஆவணக் காப்பகம்
183288